www.padippakam.com

# மத்தியகுழு கூட்டத்தின் தீர்மானங்கள் - ஆனி 25, 2002

2001 புரட்டாதியில் (Sep) ஏற்பட்ட நெருக்கடிக்குபின் பொறுப்பு எடுத்த **தற்காலிக குழுவின்** கூட்டம் வைகாசி மாதத்தில் கூடுவதாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கூட்டம் கூடுவதற்கான இடம், போக்குவரத்து மற்றும் அக்கூட்டத்திற்கு எதிர்பார்த்த தோழர்கள் தொடர்பான சிக்கல்களால் தற்காலிக குழுவின் கூட்டத்தை, மத்தியகுழு கூட்டத்திற்கு முன்னதாக ஒரே காலத்தில் ஒரே பகுதியில் கூட்டினோம். இக்கூட்டத்தின் முக்கிய முடிவுகளை தங்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டக்களத்தில் புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியும் சரி-புரட்சிகர தேசிய விடுதலை முன்னணியும் சரி தன்னை இதுவரை திடப்படுத்திக் கொள்ளவில்லை. மக்கள் மத்தியில் அரசியல் - இராணுவ சக்தியாக குறிப்பிடும்படி கட்சி தன்னை வெளிப்படுத்தவில்லை. நாடுதழுவிய அளவில் முன்னோடியான தலைமைச் சக்திகளைக்கூட மையப்படுத்தி அணிதிரட்ட முடியவில்லை.

புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முற்படும் சக்திகள் மத்தியில் ஒரு நம்பிக்கையளிக்கக் கூடிய **'சிறுபொறி'**யாக மட்டுமே கட்சி வெளிப்பட முடிந்திருக்கின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கம் போராட்டத்தையும் யுத்தத்தையும் தலைமையளித்து நடத்திக் கொண்டிருப்பதால், அதன் தாக்கம் சர்வாவியாபகமானதாக வெளிப்படுகின்றது. புலிகள் இயக்கத்தை - அதன் அரசியலை நிராகரிக்கும் தமிழீழ முற்போக்கு சனநாயக சக்திகள், தாங்கள் வாழும் நாடுகளில் பகுதிகளில் தமிழீழப் போராட்டம் குறித்து ஒரு அரசியல் - கலை இலக்கிய விமர்சனப் பத்திரிக்கைகளை வெளியீடுவதற்கு அப்பால், தாங்கள் வாழும் நாடுகளில், இடங்களில் வாழும் தமிழீழ மக்கள் மத்தியில் அல்லது, சகோதர தேச மக்கள் மத்தியில் தங்களை ஒரு சமூகப் போராட்டத்துடன் இணைந்த அரசியல் சக்தியாக வளர்த்துக்கொள்ள முடியவில்லை. அதற்காக தங்களை தயார்படுத்தவில்லை. உலக மயமாக்கலை எதிர்ப்பதாகவும், இடது சாரி சித்தாந்தத்தை ஆதரிப்பதாகவும் அடிக்கடி எழுதினாலும், உணர்வு பூர்வமாக **'சிறுகதை'**யாடல்களில் மட்டும் அக்கறையும் **'பெருங்கதை'**யாடல் எதிர்ப்பும் கொண்ட **"புதிய இடது வழியில்"** தங்களை சித்தாந்த ரீதியில் திடப்படுத்தியவர்கள் கூட அடுத்த கட்டத்தை நோக்கி நகரமுடியாது உள்ளனர்.

**'நான்காவது அகிலம்'** பற்றி கதையளப்பவர்கள், உலகமயமாக்கலுக்கு எதிரான குறிப்பான கண்ணோட்டம். செயற்பாடு இன்றி கரைவது தெரியாமல் கரைந்து கலந்து கொண்டிருக்கின்றனர். எத்தகைய தேசியப் போராட்டங்களையும் அங்கீகரிக்க மறுக்கின்றனர்.

அடுத்தபடியாக புதுக்கொலனிய நாடுகளின் கொம்யூனிட்டு ஆர்வலர்கள் - தலைமைகள் இந்நாடுகளில் நடைபெறும் தேசிய இனங்களின் போராட்டங்களையும், அதற்கு தலைமை தாங்கும் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களையும் விமர்சனம் செய்யும் முழுநேர விமர்சன நபர்களாக உள்ளனர். புதுக்கொலனிய நாடுகளின் இன்றைய ஏகாதியத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான அரசியல் - பொருளாதார - பண்பாட்டு உள்ளடக்கங்களையும், அதேவேளை இந்நாடுகளில் வாழும் தேசிய இனங்களின் தேசியப்போராட்டத்தின் அரசியல் - பொருளாதார - பண்பாட்டின் உள்ளார்ந்த அம்சங்களையும், இவற்றின் முக்கியத்துவத்தையும் கவனத்தில் கொள்ள கொம்யூனிஸ்ட் குழுக்கள் தவறுகின்றன. அனைத்து அரங்கிலும் இவை வர்க்கவிடுதலைப் போராட்டங்களுடன் கொண்டிருக்கின்ற இயங்கியல் உறவைப் பார்க்க மறுக்கின்றன. தேசிய இனப் பிரச்சனை கூர்மையடைந்த இடங்களில் வர்க்க விடுதலைப் போராட்டத்திற்கும் தேசிய இன விடுதலைப் விடுதலைப்போராட்டத்திற்கும் இடையேயான உறவைப் புரிந்து திட்டங்களை வகுத்து போராட்டத்திற்கு தலைமை தாங்கும் வரலாற்றுக் கடமையை மறுத்தன. இப்புதுக் கொலனிய நாடுகளின் கொம்யூனிஸ்ட்டுகளும் தலைமைகளும் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய தருணம் இது.

புதிய சனநாயக புரட்சித் திட்டத்தில் குட்டி முதலாளித்துவ சக்திகளையும், தேசிய முதலாளித்துவ சக்திகளையும் தமது தலைமையில் இணைப்பது பற்றி பேசுகிறவர்கள், உள்நாட்டு அரசை எதிர்த்து சுயமாக போராடும் முதலாளித்துவ - குட்டி முதலாளித்துவ இயக்கங்களை பொது எதிரிக்கு எதிராக அணி சேர்க்கும் அணுகுமுறையில் மாபெரும் இத்தவறுகளை செய்கின்றனர் **ஒன்று**. அந்த குட்டி முதலாளித்துவ தேசிய இயக்கங்களுடன் கரைந்து விடுகின்றனர். அல்லது வால் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். **இரண்டு** இனவாத அரசு நடாத்தும் இன அழிப்பு யுத்தத்தை எதிர்த்து குறிப்பிட்ட வரையறைக்குள் நின்று போராடும் அத்தேசிய இனத்தின் முதலாளித்துவ சக்திகளின் இன அழிப்பு எதிர்ப்பு யுத்தத்தை கூட **"இனவாத**



படிப்பகம்

www.padippakam.com

**யுத்தம்''** என முத்திரை குத்தி விடுகின்றனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து அன்னியப்படுகின்றனர்.

புலிகளின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை, இனவிடுதலை யுத்தத்தை கணிப்பிடுவதிலும், அவர்களுடனான உறவு எந்த மட்டத்தில் இருக்க வேண்டும் என்பதிலும் தமிழீழ - சிறீலங்கா கொம்யூனிஸ்ட்டுகள் தேசபக்த சக்திகள் மத்தியில் மேற்கண்ட தவறுகளும், குழப்பங்களும் தொடர்கின்றன. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது திருத்திக் கொள்ளாமல் ஒரு **புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியை** நம்மால் உருவாக்க முடியாது என்பது கேள்விக்கிடமற்றது.

புலிகள் இப்போது யுத்தத்தை நிறுத்தி - சமாதானப் பேச்சு வார்த்தையில் இறங்கியுள்ளனர். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல யுத்த நிறுத்தங்களும் - சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நடந்துள்ளன. ஆனால் இப்போது நடைபெறும் யுத்தநிறுத்தம் - சாமாதானப்பேச்சு ஆழமானதும் அகலமானதும் ஆகும். புலிகள் கடந்த காலங்கள் போல் இக்காலக்கட்டத்தைப் பயன்படுத்தி தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை மேலும் கூர்மைப்படுத்துவார்களா ? அல்லது ஆழமான அகலமான சர்வதேச எதிரிகளின் பொறிக்குள் சிக்கி விடுவார்களா ? என்பது பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால், **புலிகள் இயக்கம் தொடர்ந்து போராட வேண்டும்** என்பதே நமது உணர்வு பூர்வமான விருப்பம்.

இந்தியரசு - நாகலாந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்ப தாய்லாந்தில் தான் பேச்சு வார்த்தையை தொடக்கியது - காஷ்மீர் தேசிய விடுதலைப் போரை திசை திருப்ப பாராளுமன்ற சக்திகளை தனிமைப்படுத்தி தன்வயப்படுத்த **"தேர்தல்"** உத்திகளையும், விடுதலைப் போரில் உறுதியாக உள்ள இயக்கங்களை தனிமைப்படுத்தி அழிக்க **'பயங்கரவாதம்'** என்ற உத்தியையும் இந்திய அரசு பயன்படுத்துகின்றது. தாய்லாந்தில் புலிகளுடன் - சிறீலங்கா அரசு நடாத்தும் பேச்சு வார்த்தையும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பும் உத்திதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழீழ புரட்சிகர தேசிய விடுதலைச் சக்திகளின் மற்றும் கொம்யூனிஸ்ட்டுக்களின் கடமை. சர்வதேச-உள்நாட்டு எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்த - முன்னெடுக்க வேண்டும். சிறீலங்கா மக்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான பொறியை மூட்ட வேண்டும். உலக முதலாளித்துவ சக்திகளின் புனர்வாழ்வு உலக புனரமைப்பு அரசியலை, **சீர்திருத்த பொருளாதார வாதத்தை** தெளிவான முறையில் அம்பலப் படுத்தவேண்டும்.

இந்த அரசின் எத்தகைய முதலாளித்துவ பொருளாதார சீர்த்திருத்தங்களாலும், புனர்வாழ்வு, புனரமைப்பு, அன்னிய மூலதனக் குவிப்புத் திட்டங்களாலும் மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாது. இதனால் தமிழீழ - சிறீலங்கா விவசாயிகள் தொழிலாளிகள், நலிவடைந்த நடுத்தர வர்க்க மக்கள் தற்கொலைக்கு தள்ளப்படுகின்றார்கள். **இந்தப்பிரிவு மக்கள் மத்தியில் நமது கட்சி செயற்பட வேண்டும்.** தற்கொலைக்குத் தயாராகும் மக்களை விடுதலைப் போராட்டத்தின் போராளிகளாக மாற்ற வேண்டும். அடிப்படை வர்க்க வெகுசனத்திரளில் தங்கி நிற்காமல் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலைமையை, தேசிய விடுதலைப் போரில் நிறுவமுடியாது.

தமிழீழப் போராட்டத்தூடாக வளர்ந்து வந்த தேசபக்த சனநாயக சக்திகள், தமிழீழப் போராட்டத்தை அங்கீகரித்து முன்னெடுத்த கொம்யூனிஸ்ட்டுக்கள். புலிகளினனதும் மற்றைய அராஜக இயக்கத் தலைமையின் கொலைப் பயமுறுத்தல்களுக்குப் பயந்து, சிறீலங்காத் தலைநகர் சென்றதும், அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றதும் நடந்த உண்மை. மேற்கண்ட சக்திகளிடம் நிலவிய உறுதியான ஆழமான அரசியல் பார்வை இன்மை, சமூகப் பொறுப்பின்மை, மித மிஞ்சிய தமிழ்த்தேச உணர்வு, சிங்கள மக்கள் மீதான அவநம்பிக்கை இன்னபிற தனிப்பட்ட காரணங்களாலும் இவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். அங்கிருந்து கட்சி( ?) கட்ட முற்பட்டனர். இதுவும் இவர்களின் **"ஒரு அரசியல் அவா"** என்ற நிலைக்கு அப்பால் செல்லமுடியவில்லை என்பது இன்று நிதர்சனம்.

தமிழீழப் போராட்டத்தில் உறுதியாக களத்தில்-தளத்தில் நின்ற சக்திகள் பல இழப்புக்கள். தியாகங்கள் மத்தியில் தொடர்ந்தும் போராட முயற்சித்து வந்தனர். ஆனால் முதல் கட்டத் தலைமை சக்திகளின் வீரமரணங்களுக்குப் பின்னால் வந்த-தலைமை அளித்த நபர்களின், சித்தாந்த அரசியல் திசைவிலகல்கள்,



படிப்பகம்

www.padippakam.com

தெளிவின்மை, இதற்கும், அப்பால் புலிகளின் அரசியலை மட்டும் எதிர்ப்பது என்பதைத் தாண்டி புலிகளின் அழித்தொழிப்பு, ஊடுருவல் முயற்சிகளை எதிர்கொண்டு செயல்பட முடியாத - வழிகாட்ட முடியாத நிலையில் சிலர் சோர்ந்து ஒதுங்கியுள்ளனர். ஆனால் புரட்சிகர அமைப்பை கட்ட முனைந்த சக்திகள் தமிழீழத்தில் - சிறீலங்காவில் இந்தியாவிலும் இயங்கி வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத நிதர்சனம்.

தமிழீழ தேசிய விடுதலைப்புரட்சி - சிறீலங்காப் புரட்சி இவையிரண்டும் இலங்கைப் புரட்சியின் பொது வழிக்குள் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது ? என்ற பார்வையை விரிவு படுத்திவரும் சக்திகள், இலங்கையின் இவ்விரு புரட்சிப்போக்குகளும், தெற்காசிய - சர்வதேச புரட்சி வழிகளுடன் கொண்டுள்ள இயக்கவியல் உறவை, ஏற்ற இறக்கங்களை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய முன்னோடிச் சக்திகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், இன்றைய இலங்கைச் சூழலைப் பயன்படுத்தி நாட்டுக்குள் வருவது நல்லது. இலங்கையின் எந்த மூலையில் ஆவது தங்கி இருந்து கொண்டு தமிழீழ தேசிய விடுதலைப் புரட்சியை, சிறீலங்காப் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு வளர்க்க கூட்டமைக்க **புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியை** தாங்களே முன்னின்று உருவாக்க முன்வரவேண்டும். இந்தப் பணியை வரலாற்றுக் கடமையைச் செய்ய இந்தியாவில் இருந்து செயற்பட்ட RCPC இன் மத்தியக்குழு உறுபினர்கள் இலங்கைக்குச் செல்வதென்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர். இதை வெளிநாடுகளில் உள்ள மத்தியகுழு உறுப்பினர்களும் அங்கீகரித்துள்ளனர்.

1. தற்காலிக குழுக்கூட்டத்தின் முடிவுகளை மத்தியக்குழு சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டது. நெருக்கடி காலத்தில் **தற்காலிக குழு** செயற்பட்ட விதத்தை மத்தியக்குழு வரவேற்றது.

   (அ) **தற்காலிக குழு** முன் வைத்த கோரிக்கைக்கு, தோழர்களிடம் இருந்து வந்த பதில் கடிதங்களுக்கும், அவர்களின் முயற்சிக்கும் தற்காலிக குழுக்கூட்டம் நன்றி தெரிவித்தது.

   (ஆ) தோழர்களின் பதில் கடிதங்களில் இருந்த ஆலோசனைகளும் கேள்விகளும் விவாதிக்கப்பட்டன. அனைத்தையும் கூட்டம் கவனத்தில் எடுத்தது. நெருக்கடி காலத்தில் **'அவசர உதவிகள்'** செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

2. மத்திய குழுக் கூட்டத்தின் தீர்மானகரமான முடிவுகளில் முக்கியமாக இந்தியாவில் இருந்து செயற்படும் மத்தியகுழு உறுப்பினர்கள் இலங்கை செல்வதாக முடிவு செய்யப்பட்டது. இலங்கையில் அடுத்த மத்தியகுழு கூட்டம் நடைபெறும். எனவும் தீர்மானிக்கப்பட்டது. இங்கிருந்து (இந்தியா) செல்லும் மத்தியகுழு உறுப்பினர்களும் - இலங்கையில் உள்ள மத்தியகுழு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய விரிந்த மத்தியகுழு கூட்டமாக இது நடத்தப்படும் எனமுடிவு செய்யப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசியல் குழு செய்யும்.

3. கட்சியின் தற்போதைய உடனடிவேவை தலைமறைவாக உள்ளவர்கள், மற்றும் இரகசியமாகவுள்ள அனைவரும் இலங்கை செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது. அதற்கான செலவுகள், அதற்கான ஏற்பாடுகள் பற்றியும் கூட்டம் தீர்மானித்தது.

4. இலங்கை திரும்புவதற்கான ஆவண ஏற்பாடுகள், தற்காலிக தங்குமிட ஏற்பாடுகளுக்கு வெளிநாடுகளில் உள்ள தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் உதவிகள் தனிப்பட்ட நட்பு அடிப்படையிலும், அமைப்பு ரீதியாகவும் பெறுவது என தீர்மானிக்கப்பட்டது. இதற்கு ஏற்கனவே உணர்வுபூர்வகமாக சில உதவிகளைச் செய்ய முன்வந்த தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பற்றியும் அவர்களின் முன் முயற்சிகளும் கூட்டத்தில் முன் வைத்து பரிசீலிக்கப்பட்டது.

5. தமிழீழ மக்கள் கட்சி (TMK) வான் வழியாகவும், கடல்வழியாகவும் செல்வது பற்றி தெரிவித்த ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டது. அவர்களின் வெளிப்படையான தொடர்புகள், அறிமுகம் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேவேளை இரகசியமான, சிக்கல் நிறைந்த நபர்களின் பிரயாணம், தங்குமிடம் ஏனையவை நாமே நேரடியாக நமது கண்காணிப்புடன் செய்யப்படுவது தான் சிறந்தது என முடிவு செய்யப்பட்டது. காலதாமதமானாலும் நேரடி ஏற்பாடுகளே சரியானது என்பது வரலாற்று அனுபவங்களுடன் முக்கியமாக பார்க்கப்பட்டது.

6. தமிழீழ மக்கள் கட்சியின் செயலர் ஒதுங்கியுள்ளமை, **"தமிழீழம்"** "2002 முதல்" பத்திரிகை நிறுத்தப்பட்டது. மற்றும் முக்கிய தோழர்களின் செயற்பாடுகளில் வெளிப்படும் மாற்றங்கள் குறித்தும் பேசப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுடன் தொடர்ந்து ஓர் ஆரோக்கியமான உறவுகளைப் பேணுவது சிந்தாந்த, அரசியல் - அமைப்பு முரண்பாடுகளை தொடர்ந்து விவாதிப்பது. அவர்களுடன் தொடர்புகளைப் பேணிவரும் தோழர்களுக்கு ஆரோக்கியமான வழிகாட்டுதல்களை கூட்டம் வழங்கியது.

7. (அ) இலங்கை செல்வதற்கும் ஏனைய முக்கிய வேலைகளுக்கும் சகோதர நாட்டுக் கட்சிகளின் உதவிகளை கட்சி ரீதியாக கோரிப் பெற முயற்சிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) மத்திய குழுத் தோழர்கள் தங்கி வந்த மூன்று மாநில வீடுகளின் பொருள்கள், இரகசிய அலுவலகம் மற்றும் நூலகம் என அனைத்தும், இதுவரை காலமும் எமக்கு பலவழிகளில் உதவி வரும் சகோதர நாட்டுக் கட்சியிடம் ஒப்படைப்பது என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

8. கடந்தகாலங்களில் உள்நாட்டு சகோதர அமைப்புகளுடன், மற்றும் வெளிநாட்டுக் கட்சிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்த தோழர்கள் தொடர்ந்தும் அவ்வுறவுகளை அவர்களே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டது. இது வெளிநாடுகளில் உள்ள தனிநபர்கள், ஆதரவுக் குழுக்கள், அமைப்பு உறுப்பினர்களுடனான உறவுக்கும் பொருந்தும். இலங்கையில் கூடும் மத்திய குழுக் கூட்டத்தின் பின் இவ்வுறவுகள் - பொறுப்புக்கள் பற்றி தீர்மானிக்கப்படும்.

9. இந்தியாவில் இருந்து செயற்பட்ட குழுக்கள் அனைத்தும் கலைக்கப்படுகிறது. (அகதிகள் குழு, தமிழீழ ஆதரவுக்குழு, இந்திய வேலைகளுக்கு பொறுப்பான குழு) ஆனால் **'பத்திரிகை ஆதரவுக்குழு'** தொடர்ந்தும் இயங்கும்.

10. புரட்சிகர கட்சியை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் இருந்து செயற்படும், வெளிநாடுகளில் உள்ள நமது அமைப்புத் தோழர்கள் எவரும் நேரடியாக இலங்கை சென்று செயற்படத் தயாராக இல்லை. இந்தியாவில் 'குழு' மட்டத்தில் இருந்து செயற்பட்டவர்கள் அனைவரும் இலங்கை செல்வதால், இங்கு உருவாக்கிய வேலைகள் - உறவுகளை தொடர்ந்தும் நெறிப்படுத்த வெளிநாடுகளில் (அய்ரோப்பிய ஒன்றியம், வடஅமெரிக்கா, மத்திய கிழக்கு) உள்ள தோழர்களிடம் கோரப்பட்டது. எவரும் இங்கு வந்து பொறுப்பு எடுத்துச் செயற்படக் கூட முன்வரவில்லை. **'இதற்கும் தயார் இல்லாதவர்களை கட்சியின் எந்த மட்டத்தில் குழுக்களில், பொறுப்புக்களில் வைத்துக் கொள்ள முடியும் ?'** என்று கேள்விகள் கேட்கப்பட்டு, ண்ட விவாதத்தின் பின் இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் என தீர்மானத்தில் சேர்க்கப்பட்டது.

11. இந்நிலையில் இந்திய உறவுகளை ஓர் புரட்சிகர நோக்கில் தொடர்வதற்கு வேண்டிய தேவையை முன் வைத்து சில தோழர்கள் **'சமர்'** ஆசிரியர் குழுவிலிருந்து யாராவது இந்தியா வந்து செயற்பட வாய்ப்பு அளிக்கலாம் என முன் வைத்தனர். ஆனால், தற்காலிக குழுவின் செயலர் தனிப்பட அனுப்பிய மடலுக்கு சமர் பொறுப்பாக பதலிக்கவில்லை. அதனால் அவ்வாய்ப்பை அவர்களுக்கு வழக்குவதையும் பெரும்பான்மை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் எல்லோரும் இலங்கை செல்வதால் குழு முடிவுப்படி 'சமரை' வெளியிட்டு, விநியோகம் செய்து வந்த வேலையும் இனி தொடர முடியாது என்பதை சமர் குழுவிற்கு தெரிவிப்பதென முடிவு செய்யப்பட்டது.

12. **புதிய சகாப்தம்** மற்றும் முன்னணி பத்திரிக்கையின் ஆசிரியர்குழு உறுப்பினர்கள் இலங்கை செல்வதால் ஆசிரியர் குழுவும், மத்திய குழுவும் இலங்கையில் கூடிய பின்னரே **'புதிய சகாப்தம்'** மற்றும் முன்னணி வெளியீடு வெளிவரும், அதுவரை அரசியல் குழுச்செயலர், அரசியல் இராணுவ நிலைமை - சிறுபிரசுரங்களின் தேவை அவற்றை வெளியிடுவதற்கான வாய்ப்புக்களைப் பொறுத்து பத்திரிக்கைப் பெயரில் மட்டும் சிறு வெளியீட்டை வெளியிடலாம். வாய்ப்புக்களைப் பொறுத்து இன்னும் ஒரு மத்தியகுழு உறுப்பினருடன் கலந்து ஆலோசித்துச் செய்யலாம். ஆனால் இவ்வெளியீடுகளுக்காக மத்திய குழுவுக்கு பதிலளிக்கும் பொறுப்பு முழுவதும் செயலரைச் சார்ந்தது.

13. நிதி, கட்சிக் கணக்குகள் அனைத்தும் இலங்கையில் நடைபெறும் மத்திய குழுக்கூட்டத்தில், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். அவரவர் இருந்த இடங்களில் இருந்து செல்லும் போது கணக்கு விபரங்களையும் எடுத்துசெல்ல வேண்டும் என கூட்டம் தீர்மானித்தது.

14. கட்சியின் எல்லா வெளியீடுகளும் - ஆவணங்களும் இண்டு பிரதிகள் நாட்டில் அவசியம் தேவைப்படும். எனவே வெளியீடுகளை நோர்வேக்கும் ஆவணங்களை கனடாவுக்கும் பொறுப்பான தோழர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அவற்றை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யப்படும். அதன்பின்னர் அவர்கள் அவற்றை அனுப்பி வைக்கவேண்டும். இதேபோன்று முக்கிய நூல்கள் சகோதர நாட்டு கட்சி ஆவணங்களும் இலங்கையில் கிடைக்க ஆவண செய்யப்படவேண்டும்.

15. அய்ரோப்பிய - அமெரிக்க - மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் இந்தியாவில் உள்ள எமது ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், ஆதரவுக் குழுக்கள் அனைவரதும் செயல் ஆதரவும் - நன்கொடை உதவியும், கட்சி பத்திரிக்கை வெளியீட்டிற்கும், முழுநேர ஊழியர்களின் பராமரிப்புக்கும் பெரிதும் உதவிகரமாக இருந்து வந்துள்ளது. குறிப்பாக எமது இந்த ஆதரவாளர்கள் எல்லோரும் சமூகத்தின் கடை நிலை ஊழியர்களாகவே உள்ளனர். வாகன ஓட்டுனர்கள், அச்சகத் தொழிலாளர்கள், உணவுவிடுதித் தொழிலாளர்கள், தெருக்களை - வீடுகளை சுத்தம் செய்யும் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள், தையல், நெசவு, பீடி சுற்றும் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர். சிலர் மட்டும் அலுவலக ஊழியர்களாக உள்ளனர். உலகமயமாக்கப்பட்ட உழைப்புச் சுரண்டலில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்கள் தான் இவர்கள். நாடு, தேசம், மொழி, இன, மத உணர்வுகளுக்கு அப்பால் எங்கே வாழ்ந்தாலும் இவர்கள் புதுக்கொலனிய நாடுகளின் கூலித் தொழிலாளிகள் - அகதிகள் என்பது தான் உண்மை. இந்த சர்வதேச மயமாக்கப்பட்டுள்ள உழைப்புச் சுரண்டலில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் ங்கள் அனைவரும் ஒரு புரட்சிகர அரசியல் சக்திகளாக மக்கள்முன் செயற்படுவதும், உங்கள் தொழில் சார்ந்த புரட்சிகர தொழிற்சங்கங்களுடன் உங்களை இணைத்துக் கொண்டு செயற்படுதும் காலத்தின் கட்டாயம் அப்போதுதான் உங்கள் சர்வதேசிய வர்க்க உணர்வு செயல்வடிவம் பெறும்.

மத்தியகிழக்கு, அய்ரோப்பா, வட அமெரிக்க நாடுகளில் வாழ்வதால் உங்கள் வாழ்க்கைத் தரம் முக்கியமாக (பொருளாதாரத்தில், நவீன சாதனங்களை பயன்படுத்துவதில், நாகரீகமாக இருப்பதில்) மாற்றம் அடைந்திருப்பது மகிழ்ச்சியான விடயம். உங்கள் உறவினர்கள் குடும்பத்தினர் நினைப்பது போல், ங்கள் **'பணம் காய்க்கும் மரங்கள் அல்ல'** என்பது நமக்குத் தெரியும். உங்களின் அரசியல் வர்க்க உணர்வு மேலும் வளர வேண்டும் என்பதில் கட்சி தொடர்ந்து கவனம் செலுத்தும் என இக்குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை செல்லும் குழுத் தோழர்கள் தங்களை ஓரளவு நிலை நிறுத்திக் கொள்ளவும், அமைப்பின் சில உடனடித் தேவைகளுக்கும் தொடர்ந்தும் உங்களின் நன்கொடையை சிறிது அதிகரித்துக் வழங்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

16. **இலங்கையில் கட்சிக்கான பொருளாதார நிலைமைகளை எந்தெந்த வழிகளில் உருவாக்கிக் கொள்ளலாம் ? என்ன செய்யலாம் ?** என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. குறிப்பான சூழலில் மட்டுமே முடிவு எடுப்பது சரியானதாக இருக்கும் என்பதால் அங்கு சென்று ஆய்வு செய்து அடுத்த கூட்டத்தில் தீர்மானமாக குறிக்கப்படும். இப்போது இந்த விடயம் விவாதத்தில் உள்ளதால் உங்கள் அனைவரதும் ஆலோசனைகள், திட்டங்களை அமைப்பு எதிர்பார்க்கின்றது.

17. **'மாற்று மத்திய குழு'**வில் இருந்த தோழர் சங்கர், 1995இல் அவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கும், இலங்கையில் இருந்து வெளிநாட்டிற்கும் தான் சார்ந்த குழுவிற்கு அறிவிக்காமல் சென்றதால் குழுவில் இருந்து க்கப்பட்டார். அமைப்பு உறுப்பினர் உரிமை மட்டும் அனுமதிக்கப்பட்டது. பின்னர் வெளிநாட்டில் இருந்து செயலருடன் தொடர்பு கொண்ட சங்கர் மீண்டும் வெளிநாட்டில் அதற்குரிய குழுவில் தான் சேர்ந்து செயற்பட வேண்டினார். ஆனால் வெளிநாட்டு குழுவிற்கு அவரை அறிமுகம் செய்யாமல், அவர் வாழ்ந்த நாட்டில் மட்டும் ஒரு ஆதரவாளரை அறிமுகம் செய்து கொடுத்தார் செயலர். கட்சிக்கு சிறு பண உதவிகள் செய்ததற்கு அப்பால் குறிப்பான அரசியல் வேலைகளோ, ஆதரவாளர்களை அணிதிரட்டவோ இல்லை. அவர் தனது சொந்த வேலையாக நெதர்லாந்தில் இருந்து அய்ரோப்பாவின் ஏனைய நாடுகளுக்குச் செல்லும்போது அங்கு அவர் அமைப்பின் பிரதிநிதியாக தன்னை அடையாளம் காட்ட, புதிய நபர்களை வேறுநாடுகளில் அறிமுகப்படுத்த செயலர் அனுமதிக்கவில்லை. செயலரின் இந்த அணுகுமுறையை மத்திய குழு கூட்டம் சரியானதாக ஏற்றுக்கொள்கிறது. தோழர் சங்கர் 2001இல் தனக்கு சில அரசியல் முரண்பாடுகள் இருப்பதாக கூறி (என்ன என்று அறிவிக்கவில்லை) தான் கட்சியில் இருந்து விலகுவதாகவும் செயலருக்கு எழுதியுள்ளார். அதற்கான விபரமான அறிக்கை அனுப்புவதாக எழுதிய சங்கர் இதுவரை எதுவும் கட்சிக்கு அனுப்பவில்லை. தோழர் சங்கர் அமைப்பின் அடிப்படை உறுப்பினர் உரிமை, கடமைகளில் இருந்து விலகும் முடிவை இக்கூட்டம் ஏற்றுக் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

அவர் வேண்டியது போல் மத்தியக்குழு சார்பாக தொடர்பு வைத்திருந்த தோழர்களுடன் தனிப்பட்ட நட்புறவை தொடர்ந்தும் பேண அனுமதிக்கப்படுகிறது.

(வெளிநாடுகளிலிருந்து நேரடியாக அமைப்புக்கு உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர்கள், அமைப்பில் இங்கு செயற்பட்டு வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் விடயத்தில் கட்சியும், அரசியல் குழு உறுப்பினர்களும் கூடுதலான விழிப்புணர்வுடன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென ஒரு மனதாக தீர்மானிக்கப்படுகிறது. பலவருடங்களுக்கு முன்பும் இதே போன்று சிலரின் அனுபவம் அமைப்புக்கு ஏற்பட்டுள்ளதும் நினைவுப்பட்டுத்தப்பட்டது).

18. மத்தியகுழுத் தோழர்கள் ஒவ்வொருவரும் பலவழியிலான தொடர்பு உருவாக்கல் முறை மூலம் இங்கிருந்தபடி உலகளவில் உள்ள தமிழீழ சக்திகளுடன் தொடர்புகளைப் உருவாக்கி நெறிப்படுத்தி வருகின்றனர். நேரடியாக போராட்ட ஆதரவு சக்திகளை கண்டுபிடிப்பது மற்றும் கட்சியின் நிலைப்பாடுகளை விளக்கி அரசியல் புரிந்துணர்வை ஏற்படுத்தி, வேலைகளினூடாக உறுப்பினர்களாக்குவது. எமது பத்திரிக்கையின் ஆதரவுக்குழுக்கள் மூலம் ஏற்படும் தொடர்புகளும் உண்டு. அவை முகம் தெரியாத நபர்களுடானதாக இருக்கும். பின்னர் நேரடியாக சந்திப்புக்கள் வாய்ப்புக்களைப் பொறுத்து அமைவதும் உண்டு. அதன்பின் பொறுப்பில் உள்ள தோழர்கள் சந்தித்துப் பேசி, அந்த நபரின் அரசியல் உணர்வு, வளர்ச்சி மட்டத்தைப் பொறுத்து, வேலைகளினுடாகவே பரீட்சார்த்த உறுப்பினராகி பின் உறுப்பினர் என்ற தகமைக்கு தம்மை வளர்த்துக் கொண்டவர்கள் உண்டு. இந்த முறையில் அந்தந்தப் பகுதி ஊழியர்கள் தமது கடைமைகளில் ஈடுபடுகின்றனர்.

மத்திய கிழக்கு, அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளிலுல்ள இத்தகைய நல்ல சமூக சக்திகளில் சிலர் தமது திருமண வாழ்வு, மறுதிருமணம் பற்றியும் கடிதங்கள், தொலைபேசி, மின்னஞ்சல் வழியாகப் பேசும்போது, தமக்கும் ஒரு வாழ்க்கைத் துணை வேண்டும். இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள ஏழை பெண்கள், அகதிமுகாம்களில் உள்ள பெண்கள் தேவை என்றும், தொடர்ந்து தமது அரசியல், சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டுக்கு ஆதரவு தரக்கூடியவர்களாக இருக்க வேண்டும் எனக்கோருவார்கள். மூடப்பழக்க வழக்க திருமண முறையை எதிர்க்கும் தமது சொந்தக் காலில் நின்று உழைக்க தயாரான பெண்கள் என்றால் சிறந்தது எனக்கேட்பார்கள்.

நமது தோழர்களும், குடும்ப வாழ்க்கையிலும் சமூகப் போராட்டத்திலும் ஈடுபாடுள்ள ஆண்-பெண் சேர்ந்து வாழ்ந்தால் பல பிரச்சனைகளில் இயல்பாகவே வெற்றி பெற முடியும் என்பதால் அக்கறை எடுத்து சில குடும்பங்களுடன் பேசி வைப்பதும், அப்படி சில திருமணங்களும் நடை பெற்றுள்ளது.

ஆனால் முன்னணித் தோழர்களுக்கு ஏற்பட்ட இரண்டு அனுபவங்கள் மட்டும் வெளிநாடுகளிலுள்ள சில ஆண்களின் முகத்திரையை கிழித்துள்ளது.

**ஒன்று :** கனடாவில் (Canada) இருந்து வந்த தேவன் என்பவர். இவர் தான் பெரியார் சிந்தனைகளை கடைப்பிடிப்பவர் என்றும், தனக்கு மூடப்பழக்கவழக்கங்களும் சம்பிரதாய தாலி கட்டும் திருமண முறைகள் தனக்கு பிடிக்காது என்றும் இவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பெண்தான் வேண்டும் என்று கூறினார். இந்த விடயங்களை அவர் எமது ஆதரவாளரிடம் கூறியதால் அந்த நபர் அதை எம்மிடம் கூறினார். அதன்பின் நாம் தேவனிடம் நேரடியாகப் பார்த்து பேசியபோது சிலநாட்களுக்கு பின் அவரிடம் சில விடயங்களைப் பற்றி விரிவாகப் பேசியபோது தான் அவர் தனக்கு **'செவ்வாய் தோசம்'** இருப்பதால் தான் தனக்கு பெண்கிடைப்பது அரிது என்ற நிலையில் மூடப்பழக்க வழக்கம் சாஸ்திரம், சம்பிரதாயம் பார்க்காத குடும்பத்தில் பெண்கேட்டார் என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது.

**இரண்டாவது:** கொலன்ட் (Holand) இல் இருந்து வந்த கலையரசன். அரசியல் வளர்ச்சி, அரசியல் அணுகுமுறை, சமூக மாற்றம் பற்றிய சிந்தனை கொண்ட எமது ஆதரவாளராகவே அறிமுகமானார். இவர் இந்தியா வரும்போது தனக்கு திருமணம் பற்றி பேசி பெண்பார்க்கும் படியும் கேட்டுக் கொண்டார். இங்கு வந்த சில நாட்களில் நமது தோழர்களுடன் இருந்து பேசிப் பழகியபோதும், அகதி முகாமிற்கு கூட்டிச் சென்று பெண் பார்த்த போது, பதிவுத் திருமணம் செய்யவேண்டும் என பெண்வீட்டார் கேட்டனர். அப்போது தான் இவர் ஏற்கனவே திருமணம் ஆனவர். சட்டப்படி விவாகரத்து முதல் மனைவியிடம் இருந்து பெறவில்லை. முக்கியமாக இவரின் முதல் மனைவி, சென்னையில் தான்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறார் என்பதையும் தெரிந்து கொண்டு அதிர்ச்சியடைந்தோம். கலையரசனுடன் 10 வருடங்களுக்கு முன்பு மத்திய கிழக்கு நாடு ஒன்றில் கூட்டாக வேலை செய்த ஒருவர் அகதிமுகாமில் இருந்ததால் அவர் கலையரசன் பற்றி வேறு சில தகவல்களையும் தெரிவித்தார்.

இந்த இரண்டு நபர்களையும் பெண்பார்க்க கூட்டிச் சென்ற இடங்களில் அக்குடும்பத்தவர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பதில் இவர்களிடமிருந்து வெளிப்பட்ட முன்னுக்குப்பின் முரண்பாடான தகவல்களை உற்று நோக்கிய நமது தோழர்கள். இவர்களின் பொய் பித்தலாட்டத் திருமண முயற்சிகளையும் இதற்கு தங்களையும் பயன்படுத்த நினைத்த வஞ்சகதனத்தையும் நேரடியாக பேசி, தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டனர். ண்ட கால நேரடித் தொடர்புகள் இல்லாத எந்த நபர்களுக்கும் திருமண ஏற்பாடுகளில் கட்சி உறுப்பினர்கள் அக்கறை எடுக்க வேண்டாம் என இக்குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கலையரசன் தொடர்பாக சங்கர் அனுப்பிவைத்த அறிக்கையின் சில அம்சங்கள் மத்தியகுழு உறுப்பினர்கள் முன்கூட்டியே கவனத்தில் கொள்ள உதவியது.

19. மத்தியகுழு உறுப்பினர்களில் முழுநேர ஊழியர்களாக செயற்பட்டவர்களை, கட்சி பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்த வண்ணம் பராமரித்து வருகிறது. கட்சி இன்று எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சனைக்கு தீர்வு காணாமல் தொடர்ந்தும் முழு நேர ஊழியர்களை பராமரிக்க முடியாது. எனவே அனைத்து குழு உறுப்பினர்களும் சிலகாலம் வரை பகுதிநேர ஊழியர்களாகச் செயல்பட்டு கட்சியின் நிதிப் பிரச்சனையைத் தீர்க்க வழிகாண வேண்டும். முழுநேர ஊழியருக்கு இருக்க வேண்டிய சிறந்த தகைமைகளை மட்டும் கொண்ட மத்திய குழுவாக மாற வேண்டும். இதை உணர்வு பூர்வமாக புரிந்து நாம் செயற்படத் தொடங்க வேண்டும்.

ஒரு திட்டவட்டமான அரசியல் - அமைப்பு வழிமுறையும் - வேலை முறையும் - பரிசோதிப்பு முறையும் இல்லாத அமைப்புகள், கட்சிகளில் உள்ள முழுநேர ஊழியர்கள் மிகவும் சோம்பேறிகளாகவும், சீரழிந்த பழக்கவழக்கங்களிலும் மூழ்கியுள்ளனர். நாம் நமது கட்சிக்கு வெளியே இதைக் காண்கிறோம். விழிப்புணர்வு கொள்கிறோம். ஒரு பகுதி நேர ஊழியர் செய்கின்ற அளவுக்கு அரசியல் வேலை, அமைப்பு வேலை, சுயபடிப்பு, சிந்தனை வளர்ச்சி இல்லாத முழுநேர ஊழியர்களை ஒரு புரட்சிகர கட்சி ஏன் பராமரிக்க வேண்டும் ? பகுதிநேர ஊழியர்கள் தங்கள் அரசியல் அமைப்பு வேலை செய்வதுடன் தங்களின் உழைப்பில் இருந்து கொடுக்கும் நன்கொடை மூலம் கூட, கட்சி தனது முழுநேர ஊழியர்களை பராமரிக்க பயன்படுத்துகிறது. பகுதி நேர ஊழியர்களின் உழைப்பு வருமானத்தில், உண்மையான - தகைமையான முழுநேர ஊழியர்கள் மட்டுமே பராமரிக்கப் படுவதை மட்டும் தான் நமது புரட்சிகர கட்சி அனுமதிக்க முடியும்.

பொதுவாக பெரும்பாலான அமைப்புக்களிலும் இந்தக் குறைபாடுகளை நாம் காண்கின்றோம். ஆதரவாளர்களிடம் தங்கி நின்று முழுநேர ஊழியர்கள் செயற்பட்ட நிலைமை மாறி, முழுநேர ஊழியருக்கு கட்சி கொடுக்கும் பணத்தை, அவர் ஆதரவாளர் குடும்பத்திற்கு செலவு செய்து சாப்பிடும், தங்கி இருக்கும் பண்பாடு வெளிப்படுகிறது. பொதுவாக இங்கு ஆதரவாளர் குடும்பங்கள், குறிப்பாக குடும்பத்தை சேர்ந்த பெண்கள் எப்போது ஒரு முழுநேர ஊழியர் வருவார் என காத்திருப்பதும் உண்டு. முழுநேர ஊழியர் கொடுக்கும் பணத்தை பெற்று அன்றைய தமது சொந்தப் பணத்தை சேமித்து தமது ஆடம்பர செலவுகளுக்கு அதைப் பயன்படுத்தலாம் என்ற எண்ணமே இன்று பெரும்பாலான ஆதரவாளர் குடும்பங்களில் நிலவுகின்றது. நகர்ப்புற நடுத்தர வர்க்க ஆதரவாளர்குடும்பங்கள் ஒரு முழுநேர ஊழியரை எப்படி கையாள்வது என்பதில் திறமையானவர்களாக இருக்கும் அதே வேளை, கிராமப் புறங்களில் நடுத்தர விவசாயி, பணக்கார விவசாயி, சிறு முதலீட்டாளர்களை ஒரு முழுநேர ஊழியர் தனக்கு சாதகமான முறைகளில் பயன்படுத்திக் கொள்வதைக் காண முடிகிறது. கட்சி உறுப்பினர்கள் வசூலிக்கும் நன்கொடைகள் சரியான முறையில் கட்சிக்கு சென்று, கட்சி மீண்டும் செலவுகளுக்கு கொடுக்க வேண்டும். இதற்கு பதிலாக பெரும்பாலும் அவரவர்களே நிதியை வசூலித்து தன்னிச்சையாக செலவு செய்கின்றனர். இது உண்மையான ஆதரவாளர்கள் மத்தியல் அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

நமது நாட்டை பொறுத்த வரை, இயக்க இராணுவ கட்டமைப்பில் சாப்பாடு, தங்குமிடம், பராமரிப்பு செலவு என அனைத்தும் கொடுக்கப்பட்டு உழைப்பில் ஈடுபடாத ஒரு கூட்டம் உருவாக்கி விடப்பட்டுள்ளது. ஒரு அரசியல் பிழைப்புவதாகக் கூட்டம் இருக்கிறது. நேரடியாக மக்களிடம் அரசியல் வேலைகளில்



படிப்பகம்

www.padippakam.com

கூட இவர்கள் பெருமளவில் ஈடுபடுவதில்லை. இந்த சமூகப் பின்புலத்தைப் புரிந்து கொண்டு நமது கட்சி ஊழியர்களை உருவாக்க வேண்டும். சமூகப் பொறுப்புணர்வு உள்ள மக்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடுள்ள ஊழியர்களை கட்சி வளர்க்க வேண்டும். என தீர்மானிக்கப்படுகிறது.

**20.** மத்திய குழு உட்பட கட்சியின் எந்த மட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்கும் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டால், அவ்விடயத்தை உடனடியாக அரசியல் குழுவுக்கு தெரிவிக்க வேண்டும். அரசியல் குழு அல்லது மத்திய குழு ஒப்புதல் இல்லாமல் உறவுகளை பேணுவது, சந்திப்புகளை தொடர்வது கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். வெளிநாடுகளில் உள்ள கட்சி உறுப்பினர்கள் ஆதரவுக் குழுக்கள், முகம் தெரியாத தொடர்புகளை நெறிப்படுத்தி, அரசியல் அமைப்பு ரீதியில் ஒழுங்கமைக்க வேண்டிய பொறுப்புள்ளது. இக்கடமையைச் செய்ய, அரசியல் குழுத் தோழர் ஒருவர் இலங்கை செல்லும் வழியில் அதிகபட்சம் இரண்டு வருடங்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்க இக்கூட்டம் தீர்மானித்துள்ளது.

**21.** தமிழ் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த, சிறீலங்கா அரசை எதிர்த்துப் போராடவும். தமிழீழ அரசை ஒரு சமதர்ம (சோசலிச) அரசாக நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்தில் இருந்து, தமிழீழ மக்களிடம் வெளிப்பட்ட ஆயுதப்போராட்ட இயக்கங்களில் இணைந்தவர்கள் நாங்கள். அவ் இயக்க தலைமைகளால் இந்தியாவுக்கு **இராணுவப் பயிற்சிக்காக கூட்டிச் செல்லப்பட்டவர்கள். இராணுவப் பயிற்சி முகாம்களில் நாங்கள். இராணுவப் பயிற்சிக்கு ஆள் சேர்க்கும் முறை, பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்முறை, பயிற்சியும், தண்டனையும் வழங்கப்படும் முறை, இராணுவ உளவுப் பிரிவின் செயற்பாடு, இராணுவப்பயிற்சி முடித்தவர்களை பராமரிக்கம் முறை, தாக்குதல் இலக்குகளை தேர்ந்தெடுப்பது - தாக்குதல்முறை, இராணுவக் கட்டமைப்பு தன்மை, இராணுவத்தின் அரசியல் உணர்வு மற்றும் அரசியல் செயற்பாடுகளை வளர்க்கும் முறை, உற்பத்தியில் இராணுவத்தின் பங்கு என்ன ?** இக்கோரிக்கைகளை அவ் இயக்க மத்திய குழுவுக்கு முன்வைத்தவர்கள். ஆனால் தலைமைகள் இயக்கத்தின் போராட்டத்தின் வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கு பதிலாக, இதற்காக முயன்றவர்களை பிளவுவாதிகள், துரோகிகள், ஊடுருவல்காரர்கள் எனமுத்திரை குத்தியது. சிறைப்பிடித்து வைத்து சித்திரவதை செய்தது. பல முன்னணித் தோழர்களை படுகொலை செய்தன.

**இது அவ் இயக்க தலைமைகளின் இராணுவத்தவறுகள் அல்ல. சித்தாந்த அரசியல் பாதையின், குட்டி முதலாளிய - முதலாளிய தேசிய இன விடுதலை இயக்க தலைமைகளின் வெளிப்பாடு என்பதை புரிந்து கொண்டோம்.** புரட்சிகர அரசியல் சித்தாந்தங்களை கற்றோம். புரட்சிகர கொம்யூனிஸ்ட் கட்சியை, புரட்சிகர தேசிய விடுதலை முன்னணி உருவாக்குவதே ஒரே மாற்றுவழி என்ற முடிவுடன், அவ் இயக்கங்களை விட்டு வெளியேறினோம். அத்தலைமைகள் கொலை வெறியுடன் அலைந்தன, தலைமறைவாக வாழ்வதே நமக்கு முன்னிருந்த ஒரே வழி. அன்று நம்மைக் காப்பாற்றி உதவியவர்கள் நக்சல் பாரி இயக்கத்தின் தோழர்கள் - ஆதரவாளர்கள். நக்சல் பாரி கட்சிகளல்ல.

**நமது கட்சியின் உருவாக்கம் இந்தியாவில் தான் நடந்தது.** இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம் நடந்த வேளையில் தோல்வி அடைந்த ஒரு ஆயுத நடவடிக்கையால் பெரும்பாலான தோழர்கள் இந்தியச்சிறைகளில் அடைக்கப்பட்டனர். கட்சி அழிந்துவிடுமா என்ற நிலையில், மிச்சமாக இருந்த ஒரு சில தோழர்களை காப்பாற்றி பராமரித்தது நக்சல் பாரி கட்சி ஒன்றுதான். அன்றில் இருந்து இன்றுவரை தலைமறைவாகவும் - இரகசியமாகவும் செயற்படும் மத்தியகுழு உறுப்பினர்கள், கட்சியை இந்த நிலைக்கு வளர்க்க தங்களை அர்ப்பணித்துள்ளனர். நமது கட்சியின் - தோழர்களின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் எல்லா வகையிலும் தங்களின் ஆதரவை வழங்கிய இந்திய நக்சல் பாரி கட்சிகள், தேசிய இன விடுதலை இயக்கங்கள், புரட்சிகர தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புகள், மற்றும் தமிழ் மொழி இன உணர்வு அமைப்புகள். தனிநபர்கள் அனைவருக்கும், இந்தியாவில் கடைசியாக கூடும் இம்மத்திய குழு கூட்டம் நெஞ்சுணர்ந்து நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது

இந்த மத்திய குழு கூட்டத்தில் கலந்து கொள்ளாத மத்திய குழு உறுப்பினர்களுக்கு இவ் அறிக்கையை அனுப்பி, ஆலோசனைகளை பெற்று அறிக்கையை செழுமைப்படுத்தி இறுதிவடிவம் கொடுக்கும் பொறுப்பு அரசியல் குழுவிடம் ஒப்படைக்கப்படுகிறது.

மத்திய குழு
புரட்சிகர பொதுவுடமைக்கட்சி இலங்கை

**Revolutionary Communist Party of Ceylon (RCPC)**



படிப்பகம்